## என் தாத்தா / பாட்டி

**வளர்நிலை -4**

என் தாத்தா, எங்களுடனே வீட்டில் வசிப்பவர். என்மீது அளவற்ற அன்பு கொண்டவர். அவர், காலை ஐந்து மணிக்குப் படுக்கையிலிருந்து எழுவார் காலைக்கடன்களை முடிப்பார் அருகிலுள்ள பூங்காவிற்குச் சென்று நடைப்பயிற்சியை மேற்கொண்டு திரும்புவார் சாய்வு நாற்காலியில் அமர்ந்து தேநீர் அருந்திக்கொண்டே அன்றைய நாளிதழை முழுமையாய்ப் படிப்பார். புத்தகம் படிப்பது அவருக்கு மிகவும் பிடிக்கும். பொது அறிவு மிகுதியாய்ப் பெற்றவர்.

காலையில் பள்ளிக்குச் செல்லும் எனக்குத் துணையாய் என்னுடன் வருவார். எனக்குத் தேவையான பொருள்கள், தின்பண்டங்கள் ஆகியவற்றை வாங்கித் தருவார். கல்வியின் முக்கியத்துவத்தை அடிக்கடி கூறுவார்.

பள்ளிப்பருவத்தில் தாம் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் உடையவராய் இருந்ததாய், என் தாத்தா கூறுவார். “**அளவோடு கூடிய சத்தான உணவு, மாலை நேர உடற்பயிற்சி**. இவையே என் ஆரோக்கியத்திற்குக் காரணம்” என்று கூறுவார். என் தாத்தாவின் வாழ்க்கை முறை, எங்கள் வாழ்வுக்கு உரிய பாடநூல் எனலாம்.

மாணவர்களாகிய நாம், பெரியவர்களை மதித்து நமக்குத் துணையாய்க் கொளல் வேண்டும். என் தாத்தாவைப் போன்ற பெரியவர்களின் வாழ்த்தும் அறிவுரையும் நம் எதிர்கால நல்வாழ்வுக்கு வழி காட்டும்.

நன்றி, வணக்கம்!